**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.** (இவ்வழக்கில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட திரு.திணேஷ் கரூர் வைசியா வங்கி திருப்பத்தூர் கிளை மேலாளர் தற்போது சோலிங்கர் கிளைக்கு பணி மாறுதல் காரணமாக சென்றுவிட்டதாக தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள தற்போதைய கரூர் வைசியா வங்கி திருப்பத்தூர் கிளை மேலாளர் தெரிவித்தார். மேலும் அவர் கொண்டு வந்துள்ள வங்கி கணக்கு ஆவணங்கள் பார்த்து விவரங்கள் என்னால் சொல்ல இயலும் என்று தெரிவித்ததன் பேரில் அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு, அவர் பு.த.சா.2 ஆக விசாரிக்கப்படுகிறார்.)

பு.த.சா.2 பாரத், த/பெ குமார், வயது. 33

**குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை.–**

ஸ்ரீ அண்ணாமலையார் அரிசி மண்டி கணக்கு எண்.1637135000009617 என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கின் 26.10.2017 முதல் 10.05.2022 வரை உள்ள கணக்கு பட்டியல் கொண்டு வந்துள்ளேன். அந்த கணக்கு பட்டியல் கணிணியில் பதிவிரக்கம் செய்யப்பட்டுள்ளது. **அந்த கணக்கு பட்டியில் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கணக்கானது ஸ்ரீ அண்ணாமலையார் அரிசி மண்டி என்ற நிறுவனம் சார்ந்த கணக்கு என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கில் காசோலை கொடுத்தால் நிறுவனம் பெயரில் தான் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். ஆனால் காசோலையிலேயே நிறுவனத்தின் பெயரும் அச்சடிக்கப்பட்டு இருக்கும். மேற்படி வங்கி கணக்கில் தனி நபர் வங்கி பரிமாற்றம் எதுவும் நடக்கவில்லை என்றால் நடந்திருக்க வாய்ப்பில்லை. எதிரி சத்தியநாதன் மேற்படி வங்கி கணக்கை தனிப்பட்ட முறையில் இயக்க எந்த அனுமதியும் வங்கியில் பெறவில்லை என்றால் சரிதான்.

**நீதிமன்ற அனுமதியுடன் புகார்தாரர்ர தரப்பில் மறுவிசாரணை.–**

மேற்படி ஸ்ரீ அண்ணாமலையார் அரிசி மண்டி என்ற பெயரில் உள்ள வங்கி கணக்கிற்கு எதிரி சத்தியநாதன் ஒருவர் தான் புரப்பரேட்டர் என்றால் சரிதான். அவர் மட்டும் தான் அந்த வங்கி கணக்கை பயன்படுத்த இயலும் என்றால் சரிதான். வங்கி கணக்கை எதிரி சத்தியநாதன் ஒருவர் மட்டும் கையொப்பம் செய்தாலே போதும் என்றும் அவர் அதற்கு யாரிடமும் அனுமதி பெறவேண்டியதில்லை என்றால் சரிதான்.

Signature of Witness